## ஒரு பார்வை - பகுதி 1

அல்லாஹ் ஃபிர்அவ்னுக்குக் காட்டுவதற்காக, மூஸா (அலை) அவர்களுக்கு சில அற்புதங்களை கொடுத்தான். ஆனால் ஃபிர்அவ்னும் அவனுடைய மக்களும் அதனை நிராகரித்ததால் அழிந்தனர். சுலைமான் (அலை) அவர்களின் சம்பவமும் எறும்பு பேசியதும் விவரிக்கப்பட்டுள்ளது. சுலைமான் (அலை) மற்றும் ஸபா நாட்டு அரசியின் வரலாறும், அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பார்த்து அரசி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதும் விவரிக்கப்பட்டுள்ளது. ஸமூது மற்றும் லூத் (அலை) மக்கள் அல்லாஹ்வை மறுத்து, அழிவைச் சந்தித்தனர்.

## தராவிஹ் - 16: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 27, அந்நம்லு; வசனம்: 1 - 58; பிரிவு: 1 - 4

1. தா, சீன்! இவை குர்ஆனின் தெளிவான வேதவசனங்களாகும். முஃமின்களுக்கு இது நேர்வழி காட்டியாகவும், சுபச்செய்தியாகவும் இருக்கிறது. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 1)

2. மூஸா (அலை) அவர்கள், நெருப்பு ஜுவாலையை நெருங்கிய போது, அல்லாஹ் அவர்களிடம் உரையாடினான். கைத்தடி பாம்பாக மாறுவது, மற்றும் கை வெண்மையாகுவது போன்ற அத்தாட்சிகளை வழங்கினான். மூஸா (அலை) ஃபிர்அவ்னிடமும், அவனது பிரமுகர்களிடமும் அவற்றைக் காண்பித்த போது, "இது பகிரங்கமான சூனியம்" என்றனர். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 1)

3. அவர்களுடைய இதயங்கள் அதனை ஏற்க தயாராக இருந்தாலும், ஆணவத்தோடு அவற்றை மறுத்தனர். இத்தகைய விஷமிகளின் முடிவு என்னவாயிற்று என்பதை நபியே! நீர் கவனிப்பீராக! (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 1)

4. தாவூது (அலை) அவர்களுக்கும், சுலைமான் (அலை) அவர்களுக்கும் அல்லாஹ் கல்வி ஞானத்தைக் கொடுத்தான். அதற்கு அவ்விருவரும், “புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன்தான் முஃமின்களான தன் நல்லடியார்களில் அநேகரைவிட நம்மை மேன்மையாக்கினான்” என்று நன்றியுடன் கூறினார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

5. பின்னர் சுலைமான், தாவூதுக்கு வாரிசானார். அவருக்கு பறவைகளின் மொழி கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், எல்லாவிதப் பொருள்களும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. சுலைமான் (அலை) அவர்களுக்கு ஜின், மனிதன், பறவை ஆகிய இனங்களை உள்ளடக்கிய படை ஒன்று திரட்டப்பட்டது. அவைகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

6. ஒரு பிரயாணத்தில் சுலைமான் (அலை), தம் படையுடன் எறும்புகளின் பள்ளத்தாக்கு வழியாக வந்தார். அப்போது அதில் ஒரு எறும்பு இப்படிச் சொன்னது, “எறும்புகளே! உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்துவிடுங்கள். சுலைமானும், அவரது படையினரும் தங்களுக்கே தெரியாமல் உங்களை மிதித்து விடலாம்”. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

7. சுலைமான் (அலை) அவர்கள், எறும்பினுடைய குரலைக் கேட்டு புன்முறுவல் பூத்தவர்களாய் பின்வருமாறு கூறினார்கள்: “இறைவா! என் மீதும், என் தந்தை மீதும் நீ புரிந்த அருட்கொடைகளுக்காக நான் நன்றி செலுத்த எனக்கு வாய்ப்பு அளிப்பாயாக! (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

8. ஒரு நாள் சுலைமான் (அலை) பறவைகளுக்கான வருகைப் பதிவு எடுத்துக் கொண்டிருந்தபோது, ஹுத்ஹுத் பறவை அங்கு இல்லாததை அவர்கள் கவனித்தார்கள். "அது எங்கே சென்றது?" என வினவினார்கள். மேலும் அது அங்கு இல்லாததற்கு தெளிவான ஆதாரத்தைக் கொண்டு

வரவில்லையென்றால் அதனை தண்டிக்கவும் நினைத்தார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

9. சற்று நேரத்தில் அப்பறவை வந்து ஒரு செய்தியைச் சொன்னது: ஸபா நாட்டு மக்களுக்கு ஓர் அரசி இருக்கிறாள். அவளுக்குத் தேவையான ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது. அவளுக்கு மாபெரும் அரியணையும் உள்ளது. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

10. மேலும் அவளும், அவளுடைய சமூகத்தார்களும் அல்லாஹ்வையன்றி, சூரியனுக்கு ஸுஜூது செய்வதை கண்டதாகவும், அவர்களுடைய இத்தவறான செயல்களை அவர்களுக்கு ஷைத்தான் அழகாகக் காண்பித்து, அவர்களை நேரான வழியிலிருந்து தடுத்துள்ளான் எனவும் அப்பறவை சொன்னது. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

11. "வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பதை வெளிப்படுத்தக்கூடிய அல்லாஹுவுக்கு அவர்கள் சிரம் பணிந்து வணங்கவேண்டாமா? வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹுவை தவிர வேறு யாரும் இல்லை. அவன் தான் மகத்தான அர்ஷ் உடையவன்" என அப்பறவை சொன்னது. (ஸஜ்தா - 9) (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

12. சுலைமான் (அலை) அதனை உறுதி செய்ய விரும்பினார். அந்த அரசிக்கு ஒரு கடித்தை அனுப்பினார். அது "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று (துவங்கி) இருந்தது. அந்த கடிதத்தில் "நீங்கள் என்னை மிகைக்க எண்ணாதீர்கள். அடிபணிந்து வந்துவிடுங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 2)

13. அந்த அரசி "போர் புரிவதா அல்லது சமாதானம் செய்வதா?" என தீர்மானிக்க, தன் தலைவர்களுடன் ஆலோசனை செய்தார். பின்பு, அன்பளிப்புகளுடன் ஒரு நபரை அனுப்பி

அதனை சுலைமான் (அலை) ஏற்றுக் கொள்கிறாரா அல்லது மறுக்கின்றாரா என பார்க்க வேண்டுமென முடிவெடுத்தார். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

14. அவ்வாறே (தூதர்கள்) சுலைமான் (அலை) அவர்களிடம் வந்தபோது அவர், “நீங்கள் எனக்குப் பொருளைக் கொடுத்து உதவப்போகிறீர்களா? அல்லாஹ் எனக்குக் கொடுத்திருப்பது, உங்களுக்கு அவன் கொடுத்திருப்பதை விட மேலானதாகும்" என்றார். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

15. “நாம் படைகளுடன் வருவோம். அவர்களை இழிந்தவர்களாக்கி அங்கிருந்து வெளியேற்றி விடுவோம்” என சுலைமான் (அலை) தன் அறிக்கையில் சொல்லி அனுப்பினார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

16. ஸபா நாட்டு ராணி இஸ்லாத்தை ஏற்க வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி சுலைமான் (அலை) அவர்களுக்கு கிடைத்தபோது, ராணி வந்து சேரும் முன்பே அவரது சிம்மாசனத்தை இங்கு கொண்டு வருபவர் யார்? என்று ஜின்களிடம் கேட்டார்கள். (மேலும் ஒரு புதிய மாளிகையை கட்டுமாறும் அந்த ஜின்களைப் பணித்தார்கள்). (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

17. ‘உங்களுடைய சிம்மாசனத்திலிருந்து நீங்கள் எழுந்திருப்பதற்கு முன் அதனை நான் கொண்டு வந்து சேர்த்திடுவேன்’ என்று சக்தி வாய்ந்த ஒரு ஜின், சொன்னது. ‘கண் சிமிட்டுவதற்குள் நான் கொண்டு வந்து சேர்த்துவிடுவேன்’ என்று வேதத்தின் ஞானம் கொடுக்கப்பட்ட ஒருவர் (அல்லது இன்னொரு ஜின்) சொன்னது. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

18. அவ்வாறே, அந்த சிம்மாசனம் தமக்கு முன்பாக வந்து சேர்ந்ததைக் கண்ட சுலைமான் (அலை), “இது என் இறைவனின் அருட்கொடை” என்றார்கள். “நான் நன்றி

செலுத்துகின்றேனா அல்லது இல்லையா என்று சோதிப்பதற்கே அல்லாஹ் இதை அருளியுள்ளான்" என்றும் கூறினார்கள். மேலும் அந்த ராணி அறிந்து கொள்ள முடியாதபடி அவளுடைய அரியாசனத்தின் தோற்றத்தை மாற்றச் சொன்னார்கள். இதன் மூலம் அவள் அதை அடையாளம் கண்டு கொள்கிறாளா என பார்ப்பதற்கே இவ்வாறு செய்தார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

19. அவள் வந்து சேர்ந்த போது, அவளுக்கென்று சுலைமான் (அலை) வடிவமைத்த சிம்மாசனத்தைக் கண்டதும் 'இது என்னுடைய சிம்மாசனத்தைப் போன்றுள்ளதே' என்று கேட்டாள். அப்போது சுலைமான் (அலை), "இந்தப் பெண்மணிக்கு முன்பே நாங்கள் ஞானம் கொடுக்கப்பட்டு விட்டோம். நாங்கள் முஸ்லிம்களாகவும் இருக்கிறோம்" என்று) கூறினார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

20. அவள் மாளிகையில் நுழைந்த போது, அதன் தரையை நீர்த் தடாகம் என்று எண்ணி, தன் கீழாடையை உயர்த்தினாள். அப்போது சுலைமான் (அலை), "இது நீர்த் தடாகமல்ல. பளிங்குத் தரையினால் வடிவமைக்கப்பட்ட மாளிகை", என்று சொன்னார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

21. இந்த அற்புதங்களைக் கண்டதும், "இறைவனே! நிச்சயமாக எனக்கு நானே அநியாயம் செய்து கொண்டேன். உலகம் முழுமைக்கும் இறைவனாக இருக்கின்ற அல்லாஹ்வை சுலைமான் (அலை) அவர்களுடன் சேர்ந்து நானும் ஏற்றுக் கொண்டு என்னை ஒப்படைக்கிறேன்" என்று அவள் கூறினாள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 3)

22. ஸாலிஹ் (அலை) அவர்கள் ஸமூத் கூட்டத்தினரிடம் அல்லாஹ்வை வணங்குமாறு கூறினார். ஆனால் அவர்கள் ஊரில் குழப்பம் செய்து கொண்டு 9 பிரிவினராக இருந்தனர். அதுமட்டுமின்றி ஸாலிஹ் (அலை) அவர்களையும், அவர்களது

குடும்பத்தினரையும் கொல்லத் திட்டம் தீட்டினர். ஆனால் அல்லாஹ் அவர்களது சூழ்ச்சியை முறியடிக்கச் செய்தான். அது அவர்களுக்கு தெரியாது. (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 4)

23. நபியே! அவர்களது சூழ்ச்சியின் முடிவு என்னவாயிற்று என்பதை நீர் கவனிப்பீராக! அவர்களையும், அவர்களுடைய சமூகத்தார் எல்லோரையும் அல்லாஹ் அழித்தான். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 4)

24. லூத் (அலை) அவர்களின் சமுதாயத்தினர் ஓரினச் சேர்க்கை செய்துவந்தனர். அவர்கள் அறிவற்ற கூட்டத்தினராக இருந்தனர். அல்லாஹ், லூத் (அலை) அவர்களையும், அவரின் மனைவியைத் தவிர அவரது மற்ற குடும்பத்தினரையும் காப்பாற்றினான். அல்லாஹ் அம்மக்கள் மீது கல்மாரி பொழியச் செய்து அவர்களை அழித்தான். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 2

**காஃபிர்கள் அல்லாஹ்வின் படைப்புகளைப் பற்றி சந்தேகம் கொண்டு, மரணத்திற்குப் பிறகான மறுமை வாழ்க்கையைப் பற்றி கேள்வி எழுப்புகிறார்கள். அல்லாஹ் அருளிய வேதங்களைப் பற்றி சிந்திக்காமல் அதனை மறுத்ததற்காக மறுமை நாளில் அவர்களிடம் கேள்வி கேட்கப்படும். ஃபிர்அவ்னிடமிருந்து குழந்தையாக இருந்த மூஸா (அலை) அவர்களை அல்லாஹ் எவ்வாறு காப்பாற்றினான் என்பதிலிருந்து ஸூரா அல்கஸஸ் தொடங்குகிறது.**

## தராவிஹ் - 16: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 27, அந்நம்லு; வசனம்: 59 - 93; பிரிவு: 5 - 7

1. **ஏக இறையை மறுப்பவர்கள், "நாங்களும் எங்கள் மூதாதையரும் இறந்து மண்ணாகிப் போன பின்னர், மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு, கொண்டு வரப்படுவோமா?" என கேட்கின்றனர். "நீங்கள் பூமியில் சுற்றி வாருங்கள். பாவிகளின் இறுதி முடிவு எவ்வாறு என்பதை கவனியுங்கள்". (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 6)**

2. **கியாமத் நாளில், பூமியிலுள்ள ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இறை வசனங்களை மறுத்தவர்கள் ஒன்று திரட்டப்பட்டு அணிவகுத்து நிறுத்தப்படுவார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 7)**

3. **அவர்கள் யாவரும் வந்ததும், "நீங்கள் என் வசனங்களை முழுமையாக அறிந்துகொள்ளாமல் அவற்றைப் பொய்ப்பித்துக் கொண்டிருந்தீர்களா? நீங்கள் என்னதான் செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று அல்லாஹ் கேட்பான். அவர்கள் செய்து வந்த அக்கிரமத்தின் காரணத்தினால், அவர்கள் மீது**

வேதனைவாக்கு பலிக்கும். ஆகவே, அவர்கள் பேசமாட்டார்கள். (ஸூரா - அந்நம்லு; பிரிவு: 7)

## ஸூரா - 28, அல்கஸஸ்; வசனம்: 1 - 13; பிரிவு: 1

4. தா ஸீம் மீம்! இவை தெளிவான வேதத்தின் வசனங்களாகும். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

5. மூஸா (அலை) மற்றும் ஃபிர்அவ்னைப் பற்றிய தகவல்களை அல்லாஹ் நம்பிக்கை கொள்ளும் மக்களுக்காக கூறுகிறான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

6. ஃபிர்அவ்ன் பெருமையடித்து, பூமியிலுள்ளவர்களை பல பிரிவுகளாக ஆக்கி, அதில் ஒரு பிரிவினரை பலவீனமாக ஆக்கினான். அவர்களில் ஆண்களை கொன்றுவிட்டு பெண்களை உயிரோடு விட்டுவிட்டான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

7. பூமியில் பலவீனப் படுத்தப்பட்டவர்களுக்கு உதவி செய்யவும், அவர்களைத் தலைவர்களாகவும், வாரிசுதாரர்களாக ஆக்கவும் அல்லாஹ் முடிவு செய்தான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

8. மூஸாவின் தாயாருக்கு, “உன் குழந்தைக்குப் பாலூட்டுவாயாக! அவரைப் பற்றி நீ பயந்தால், அவரை (கூடையில் வைத்து) ஆற்றில் போட்டு விடு. நீ பயப்பட வேண்டாம். நிச்சயமாக நாம் அவரை உம்மிடமே கொண்டுவருவோம். அவரை நம் தூதர்களில் ஒருவராக ஆக்குவோம்!” என்று அல்லாஹ் வஹீ அறிவித்தான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

9. ஆற்றிலிருந்து அக்குழந்தையை ஃபிர்அவ்னின் குடும்பத்தினர் எடுத்துக் கொள்ளும்படி அல்லாஹ் ஏற்பாடு செய்தான். அக்குழந்தையைப் பார்த்து, "இக்குழந்தை எனக்கும் உங்களுக்கும் கண் குளிர்ச்சியாக இருக்கும். இதை நீங்கள் கொன்று விடாதீர்கள். நமக்கு இவர் பயன் அளிக்கக்கூடும்.

நாம் இவரை நம் புதல்வராக தத்தெடுத்துக் கொள்ளலாம்" என்று ஃபிர்அவ்னின் மனைவி சொன்னார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

10. அனைத்து செவிலித் தாய்மார்களையும் முன்பே அவருக்கு அல்லாஹ் தடை செய்திருந்தான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

11. மூஸாவின் சகோதரி, ஃபிர்அவ்னுடைய மனைவியிடம் வந்து இக்குழந்தையை அக்கறையுடன் கவனித்துக் கொள்கிற ஒரு வீட்டினரைப் பற்றிக் குறிப்பிட்டார். இவ்வாறே அல்லாஹ், மூஸாவை தன் தாயிடம் மறுபடியும் கொண்டு வந்து சேர்த்தான். அல்லாஹ்வின் வாக்குறுதி சத்தியமானது என்பதை அவள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவன் இவ்வாறு செய்தான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 1)

## ஒரு பார்வை - பகுதி 3

**மூஸா (அலை) அவர்களின் இளமைப் பருவத்தில் தவறுதலாக ஒரு மனிதனைக் கொன்றது, அவர் மத்யனுக்குத் தப்பிச் சென்றது, அவரது திருமணம், அவர் தூர் மலையில் நெருப்பைக் கண்டது மற்றும் ஃபிர்அவ்னிடம் நபியாக அனுப்பப்பட்டது ஆகிய நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஃபிர்அவ்ன், ஹாமானிடம் உயரமான ஒரு கோபுரத்தைக் கட்டச் சொன்ன சம்பவம் மற்றும் ஃபிர்அவ்னும் அவனது படையும் கடலில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 16: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 28, அல்கஸஸ்; வசனம்: 14 - 50; பிரிவு: 2 - 5

1. **மூஸா முதிர்ச்சியும், வளர்ச்சியும் அடைந்தபோது, அல்லாஹ் அவருக்கு ஞானத்தையும், கல்வியையும் அளித்தான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 2)**

2. **ஒரு நாள் மூஸா (அலை) நகரத்தில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு இரண்டு மனிதர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் அவர் இனத்தவர் (இஸ்ரவேலர்), மற்றொருவர் எதிரி இனத்தைச் சேர்ந்தவர் (எகிப்தியர்). அவர் இனத்தவர் உதவி கோரினான். மூஸா (அலை) அப்பகைவரை ஒரு குத்துக் குத்தினார். அவன் இறந்துவிட்டான். (இது தற்செயலாக நடந்தது. அவர்கள் அவனை கொல்வதற்காக குத்தவில்லை). (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 2)**

3. **இதைக் கண்ட மூஸா (அலை), இது ஷைத்தானுடைய வேலை என்று நினைத்து அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினார்கள். அல்லாஹ், அவர்களுடைய தௌபாவை ஏற்றுக் கொண்டான். “என் இறைவா! என் மீது நீ அருள் புரிந்ததன் காரணமாக, நான் இனி ஒருபோதும்**

குற்றவாளிகளுக்கு உதவி செய்பவனாக இருக்க மாட்டேன்” என்று கூறினார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 2)

4. மறுநாள் காலையில் மூஸா (அலை) அவர்களிடம் முன் தினம் அவரிடம் உதவி கோரியவன் (இஸ்ரவேலன்) தன்னை எதிரிகள் கொல்ல வருவதாக கூறி அவரை உதவிக்காக கூச்சலிட்டு அழைத்தான். அதற்கு மூஸா (அலை), “நிச்சயமாக நீ பகிரங்கமான கலகக்காரனாக இருக்கின்றாய்” என்று அவனிடம் கூறினார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 2)

5. பின்னர், மூஸா (அலை) அவனைப் பிடிக்க நாடியபோது, அவன் தன்னையே பிடிக்க வருகிறார் என்று எண்ணி, “மூஸாவே! நேற்று ஒரு மனிதனை நீர் கொலை செய்தது போல், என்னையும் கொலை செய்ய நாடுகிறீரா?” என்று கூறினான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 2)

6. மூசா (அலை) எகிப்தியனை கொன்ற விவரம் நகரத்தில் பரவிவிட்டது. பின்னர் நகரத்திலிருந்து ஒரு மனிதர் ஓடி வந்து அவரை அந்நகர பிரமுகர்கள் ஒன்றுகூடி கொன்று விட திட்டமிடுவதாக கூறினார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 2)

7. ஆகவே, மூஸா (அலை) பயத்துடனும், கவனமாகவும் அந்நகரத்தை விட்டு வெளியேறினார். “என் இறைவா! இந்த அக்கிரமக்கார சமூகத்தாரை விட்டும் நீ என்னைக் காப்பாற்றுவாயாக!” என்று பிரார்த்தித்தார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 2)

8. பின்னர், அவர் மத்யன் நாட்டின் பக்கம் சென்றார். அந்நாட்டு நீர்நிலைக்கு அருகே வந்தபோது, அவ்விடத்தில் ஒரு கூட்டத்தினர் தம் கால்நடைகளுக்குத் தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்ததைக் கண்டார். மேலும் இரு பெண்கள் தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் புகட்டாது ஒதுங்கி நின்று, அந்த

ஆண்கள் கூட்டத்தினர் முடிக்கும் வரை காத்திருப்பதைக் கண்டார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 3)

9. ஆகையால், மூஸா (அலை) அப்பெண்களின் ஆடுகளுக்கு தண்ணீர் புகட்டினார். பிறகு அவர் ஒரு மர நிழலில் ஒதுங்கி, "என் இறைவா! நீ எனக்கு வழங்கும் எல்லா நன்மைகளுக்கும், நான் தேவையுள்ளவனாகவே இருக்கின்றேன்" என்று கூறினார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 3)

10. சிறிது நேரம் கழித்து, இரு பெண்களில் ஒருவர் மூஸா (அலை) அவர்களிடம் வந்து, "உங்களின் உதவிக்கான கூலியை தருவதற்கு என் தந்தை உங்களை அழைக்கிறார்" என்றார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 3)

11. மூஸா (அலை), அப்பெண்களின் தந்தையை சந்தித்து தனக்கு நேர்ந்த சம்பவத்தைப் பற்றி கூறினார்கள். அதற்கு அவர், "நீர் பயப்பட வேண்டாம். அநியாயக்காரர்களிடமிருந்து நீர் தப்பித்து விட்டீர்" என்று ஆறுதல் கூறினார். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 3)

12. "என்னுடைய ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம். அதற்கு நீ இங்கு எட்டு ஆண்டுகள் என்னிடம் வேலை செய்யவேண்டும். 10 ஆண்டுகள் பூர்த்தி செய்தால் நல்லது, அது உன்னுடைய விருப்பம்" என அப்பெரியவர் மூஸா (அலை) அவர்களிடம் கூறினார். மூஸா (அலை) அதனை ஏற்றுக் கொண்டு மத்யன் நாட்டில் தங்கிவிட்டார்கள். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 3)

13. ஒப்பந்தத்தை நிறைவேற்றி முடித்து விட்டு மூஸா (அலை), தன்னுடைய மனைவியுடன் புறப்பட்டார்கள். அவர்கள் தூர் மலை இருக்கும் திசையில் வந்தபோது நெருப்பொன்றை கண்டார்கள். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

14. அவர் நெருப்பின் அருகே வந்த போது, அல்லாஹ் அவரிடம் பேசினான். அல்லாஹ் அவரது கைத்தடியைக் கீழே எறியும்படி கட்டளையிட்டான். அவர் அவ்வாறு எறிந்ததும், அது பாம்பைப் போன்று நெளிவதைக் கண்டு, அவர் பின்வாங்கி ஓடினார். அப்பொழுது, "மூஸாவே! முன்னோக்கி வாரும், அஞ்சாதீர்! நீர் பாதுகாப்பு பெற்றவர்களில் ஒருவர் ஆவீர்!" என்று அல்லாஹ் கூறினான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

15. மேலும் அல்லாஹ் அவரது கையை சட்டைக்குள் புகுத்தச் சொன்னதும், அது ஒளி மிக்க வெண்மையாக வெளிவந்தது. 'இவ்விரண்டும் ஃபிர்அவ்னுக்காகவுகும், அவனுடைய பிரமுகர்களுக்காகவும், இறைவனால் அளிக்கப்பட்ட இரு அத்தாட்சிகளாகும்' என அல்லாஹ் கூறினான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

16. மூஸா (அலை) அவர்கள், ஒரு மனிதரைக் கொன்றதன் காரணமாக அவ்வூர் மக்கள் தன்னைக் கொன்று விடுவார்களோ என்று பயந்தார்கள். ஆகவே, அல்லாஹ்விடம் தனக்கு உதவியாகவும், (தன் கொன்னல்) பேச்சுக்குத் துணையாகவும், தன் சகோதரர் ஹாரூண் (அலை) அவர்களை தன்னோடு அனுப்பி வைக்கும்படி அல்லாஹ்விடம் கேட்டார்கள். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

17. அல்லாஹ் "நாம் உம்மை உம் சகோதரரைக் கொண்டு வலுப்படுத்துவோம். நாம் உங்கள் இருவருக்குமே வெற்றியளிப்போம். ஆகவே, அவர்கள் உங்களிருவரையும் நெருங்கவும் முடியாது. நம்முடைய அத்தாட்சிகளைக் கொண்டு, நீங்களிருவரும், உங்களைப் பின்பற்றுவோரும் வெற்றி அடைவீர்கள்" என கூறினான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

18. அவர்கள் ஃபிர்அவ்னை சந்தித்தபொழுது, ஃபிர்அவ்னும், அவனுடைய பிரமுகர்களும் மூஸா (அலை) அவர்களின்

அற்புதங்களை மாயாஜால வித்தை என்று சொல்லி புறக்கணித்தனர். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

19. ஃபிர்அவ்ன் கூறினான்: “பிரமுகர்களே! என்னைத்தவிர உங்களுக்கு வேறொரு இறைவன் இருக்கின்றான் என்பதாக நான் அறியவில்லை. ஆகவே, ஹாமானே! களிமண்ணைச் சுட்டு (செங்கல்கள் செய்து) பிறகு எனக்காக ஓர் உயரமான கோபுரத்தைக் கட்டுவாயாக! (அதன் மேல் ஏறி) நான் மூஸாவின் இறைவனைப் பார்க்க வேண்டும். மேலும் நிச்சயமாக நான் இவரை ஒரு பொய்யர் என்றே கருதுகின்றேன்". (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

20. ஃபிர்அவ்னும், அவனது படையினரும் அழிச்சாட்டியம் செய்தனர். மேலும் அவர்கள் அல்லாஹ்விடம் நிச்சயமாகத் திரும்பக் கொண்டு வரப்பட மாட்டார்கள் என்றும் எண்ணிக் கொண்டார்கள். ஆகவே அல்லாஹ் அவர்களை கடலில் தூக்கி எறிந்தான். இதன் மூலம், அக்கிரமக்காரர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 4)

21. மூஸா (அலை) அவர்களுக்கு தௌராத் வேதம் வழங்கப்பட்டது. அது மக்களுக்கு நேர்வழியாகவும், அருளாகவும் அமைந்தது. (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 5)

22. “நபியே! அல்லாஹ்வின் அருளினால் உங்களுக்கு இந்தச் செய்திகள் அறிவிக்கப்படுகிறது. உமக்கு முன் எச்சரிக்கையாளர் வராத ஒரு சமூகத்தாரை நீர் எச்சரிக்க வேண்டும் என்பதற்காக. இதனால் அவர்கள் படிப்பினை பெறலாம். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 5)

## **ஒரு பார்வை - பகுதி 4**

**மறுமை நாளில், கா:ஃபிர்கள் தங்கள் வணங்கிவந்த பொய்யான கடவுள்கள் தங்களைக் கைவிட்டதையும், அல்லாஹ் ஒருவனே இறைவன் என்பதையும் உணர்வார்கள். பெரும் செல்வங்கள் கொடுக்கப்பட்ட காரூணின் வரலாறு மூலம், உண்மையான வெற்றி நேர்மையாளர்களுக்கே என்பதை நினைவூட்டுகிறது.**

## **தராவிஹ் - 16: (ரக்அத் 13 முதல் 16)**

### **ஸூரா - 28, அல்கஸஸ்; வசனம்: 51 - 88; பிரிவு: 6 - 9**

1. **அல்லாஹ் விசாரணைக்காக கா:ஃபிர்களை கூப்பிடும் நாளில், "உங்களை நேர்வழிக்கு அழைத்த நம் தூதர்களுக்கு என்ன பதில் கொடுத்தீர்கள்?" என்றும் கேட்பான். ஆனால், அந்நாளில் அவர்களுக்கு எல்லா விசயங்களும் மறந்து விடும். ஆகவே அவர்கள் ஒருவரையொருவர் கேட்டுக் கொள்ளவும் மாட்டார்கள். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 7)**

2. **இன்னும் அல்லாஹ் அவர்களை அழைக்கும் நாளில், "எனக்கு இணையானவர்கள் என்று நீங்கள் எண்ணியிருந்தீர்களே, அவர்கள் எங்கே?" என்று கேட்பான். அப்பொழுது அவர்கள் சத்தியமென்பது அல்லாஹ்வுக்கே சொந்தமென்றும், அவர்கள் இட்டுக்கட்டியவை எல்லாம் அவர்களை விட்டு மறைந்துவிடும் என்றும் அறிந்து கொள்வார்கள். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 7)**

3. **காரூண் என்பவர் மூஸா (அலை) அவர்களுடைய சமுதாயத்திலுள்ளவர். மேலும் அவர்களுக்கெதிராக அழிச்சாட்டியம் செய்தவர். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 8)**

4. அவனுடைய கஜானாவின் சாவிகளை மாபெரும் கூட்டம் சுமக்கின்ற அளவுக்கு, அல்லாஹ் காரூணுக்கு மிகப் பெரும் செல்வத்தை வழங்கினான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 8)

5. "நீர் பெருமை தலைக்கேறி ஆணவம் கொள்ள வேண்டாம்" என்று அம்மக்களால் காரூண் எச்சரிக்கப்பட்டான். ஆனால் அவன், "இவையனைத்தும் என்னுடைய அறிவால் எனக்கு கிடைத்தவை" என்று பெருமையடித்தான். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 8)

6. உலக வாழ்க்கையில் மோகம் கொண்டிருந்த மக்களின் முன்னால் ஒருநாள் காரூண் கடந்து சென்றான். அப்போது அம்மக்கள், 'காரூணுக்கு கொடுக்கப்பட்டது போன்று நமக்கும் இருந்திருக்க வேண்டுமே' என்று கூறினார்கள். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 8)

7. மறுநாள் அல்லாஹ், அவனையும், அவனுடைய மாளிகையும் பூமியில் விழுங்கச் செய்தான். அல்லாஹ்வை தவிர அவனுக்கு உதவி செய்கிற கூட்டத்தார் எவருமில்லை. இன்னும் அவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவும் முடியவில்லை. (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 8)

8. அப்போது அதே மக்கள், "அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு ரிஜ்கை விசாலமாகவும், தான் நாடியவர்களுக்கு ரிஜ்கை நெருக்கடியாகவும் ஆக்குகின்றான். அல்லாஹ்வின் கிருபை இல்லையென்றால் அவன் நம்மையும் பூமியில் விழுங்கச் செய்திருப்பான்" என்று கூறினர். (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 8)

9. பூமியில் வரம்பு மீறாத, குழப்பம் விளைவிக்காதவர்களுக்கென்று சுவர்க்கத்தை அல்லாஹ்

**தயார் செய்து வைத்துள்ளான். நல்ல முடிவென்பது பயபக்தியுள்ளவர்களுக்கே! (ஸூரா - அல்கஸஸ்; பிரிவு: 9)**

## ஒரு பார்வை - பகுதி 5

**யார் உண்மையாளர்கள், யார் பொய்யர்கள்? என்பதை அல்லாஹ் சோதித்து அறிந்து கொள்கிறான். பெற்றோரிடம் அன்பாக இருங்கள். ஆனால் இறைமறுப்பு (ஷிர்க்) விஷயங்களில் அவர்கள் உங்களை வற்புறுத்தினால் அவர்களுக்குக் கீழ்ப்படியாதீர்கள். இப்ராஹீம் (அலை) அவர்கள் ஷிர்க் செய்ய வேண்டாம் என்று தனது மக்களுக்கு அறிவுறுத்தியதால், அவர்களை உயிருடன் எரிக்க முயன்றனர். மலக்குகள் இப்ராஹீம் (அலை) அவர்களை சந்தித்தது பற்றியும், அதே மலக்குகள் லூத் (அலை) மக்களை அழித்ததையும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆத், ஸமூத், மத்யன், ஃபிர்அவ்ன் சமூகத்தார்கள் தங்களது நபிகளை நிராகரித்ததன் விளைவாக அல்லாஹ் அவர்கள் அனைவரையும் அழித்து விட்டான். அல்லாஹ்வைத் தவிர வேறு பாதுகாவலர்களை எடுத்துக் கொள்பவர்களுக்கு சிலந்தியின் வலை பற்றிய உவமை கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 16: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 29, அல்அன்கபூத்; வசனம்: 1 - 44; பிரிவு: 1 - 4

1. **அலிஃப், லாம், மீம்! "நாங்கள் ஈமான் கொண்டு விட்டோம்" என்று சொன்னதற்காகவே சோதிக்காமல் விடப்படுவார்கள் என்று மக்கள் எண்ணிக்கொண்டார்களா? (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 1)**

2. **யார் உண்மையாளர்கள், யார் பொய்யர்கள்? என்பதை அல்லாஹ் சோதித்து அறிந்து கொள்கிறான். அதன் மூலம் அவர்களுக்கு நற்கூலி அல்லது தண்டனை உண்டு. (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 1)**

3. **தன் பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு மனிதனுக்கு நாம் அறிவுறுத்தியுள்ளோம். ஆனால் இணைவைக்குமாறு அவர்கள்**

உன்னை வற்புறுத்தினால் அவர்களுக்கு நீ கட்டுப்பட வேண்டாம். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 1)

4. நூஹ் (அலை), தம் சமூகத்தாருடன் 950 வருடம் வாழ்ந்தார்கள். ஆனால் அம்மக்கள் அநியாயக்காரர்களாக இருந்தமையால் அவர்களை வெள்ளப் பிரளயம் பிடித்துக் கொண்டது. அப்போது அவரையும், அவர்களுடைய கப்பல் தோழர்களையும் அல்லாஹ் வெள்ளப் பிரளயத்திலிருந்து காப்பாற்றினான். அதை அகிலத்தாருக்கு ஓர் அத்தாட்சியாக அவன் ஆக்கினான். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 2)

5. இப்ராஹீம் (அலை) தம் மக்களுக்கு, “அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; அவனை வணங்குங்கள். நீங்கள் இதை புரிந்துகொண்டால், இதுவே உங்களுக்கு நன்மையுடையதாக இருக்கும்” என்று சொன்னார்கள். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 2)

6. ஆனால் சிலைகளை வணங்கிக்கொண்டிருந்த அம்மக்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம், "உன்னைக் கொன்று விடுவோம். உன்னை எரித்து விடுவோம்" என்றனர். இதைத் தவிர வேறு எந்த பதிலும் அவர்களிடமிருந்து வரவில்லை. (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 3)

7. இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்புக் குண்டத்தில் தூக்கிப் போடப்பட்டபோது, அல்லாஹ் அதை குளிர்ச்சியாகவும், இதமானதாகவும் ஆக்கி, இப்ராஹீம் நபியைக் காப்பாற்றினான். நிச்சயமாக இதில் ஈமான் கொண்ட சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 3)

8. இப்ராஹீம் (அலை) மக்களிடம் சொன்னார்: “அல்லாஹ்வை தவிர சிலைகளை நீங்கள் வணங்குவதற்குக் காரணமே,

இவ்வுலக வாழ்க்கையில் உங்களுக்கிடையேயான நேசம்தான். பின்னர் கியாமத் நாளின் போது உங்களில் சிலர் சிலரை மறுப்பர். உங்களில் சிலர் சிலரை சபிப்பர். அங்கு உங்கள் உறைவிடம் நரகம்தான். அங்கு உங்களுக்கு உதவுவோர் யாருமில்லை". (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 3)

9. (இவையனைத்திற்கும் லூத் (அலை) சாட்சியாக இருந்தார்கள்). மேலும் அவர்கள் இப்ராஹீம் (அலை) மீது நம்பிக்கை கொண்டிருந்தார்கள். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 3)

10. இப்ராஹீம் (அலை), "நிச்சயமாக நான் என் இறைவனை நாடி இவ்வூரை விட்டு ஹிஜ்ரத் செய்கிறேன். நிச்சயமாக அவன் வல்லமை மிக்கவன். ஞானம் நிறைந்தவன்" என்று கூறினார்கள். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 3)

11. மேலும், அல்லாஹ் அவர்களுக்கு இஸ்ஹாக்கையும், யஃகூப்பையும் பரிசளித்தான். இன்னும் அவருடைய சந்ததியிலே, நபித்துவத்தையும், வேதத்தையும் வழங்கினான். அவருக்கு அவருடைய கூலியை இவ்வுலகத்திலும் கொடுத்தான். நிச்சயமாக மறுமையில் அவர் நல்லவர்களில் ஒருவராவார். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 3)

12. லூத்(அலை) அவர்கள். தம் சமூகத்தாரிடம் "நிச்சயமாக நீங்கள் உலகத்தாரில் எவருமே முன் செய்திராத மானக்கேடான (ஓரினச்சேர்க்கைச்) செயலை செய்கிறீர்கள்" என்றார். அதற்கு அம்மக்களிடம் பதில் இல்லை. "நீர் உண்மையாளராக இருந்தால் எங்களை அழிக்கக் கூடிய அல்லாஹ்வின் வேதனையை கொண்டு வாரும்" என்றனர். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 3)

13. இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு முதுமையிலும் குழந்தை பிறக்கப்போகும் சுபச்செய்தியுடன், வானவர்களை

அவர்களின்பால் அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவர்கள் அந்த ஊர்வாசிகளை அழிக்கப் போகும் செய்தியைச் சொன்னனர். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 4)

14. “நிச்சயமாக அவ்வூரில் லூத்தும் இருக்கிறாரே” என்று இப்ராஹீம் (அலை) கூறினார்கள். அதற்கு அம்மலக்குகள், "அதில் இருப்பவர்கள் யார் என்பதை நாங்கள் நன்கறிவோம். எனவே அவருடைய மனைவியைத் தவிர, அவரையும் அவர் குடும்பத்தாரையும் நிச்சயமாகக் காப்பாற்றுவோம். அவள் அழிந்துபோவோரில் ஒருத்தியாக தங்கி விடுவாள்" என்று சொன்னார்கள். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 4)

15. லூத் (அலை) அவர்களிடம் வானவர்கள் வந்தனர். அம்மக்களுடைய கேவலமான இச்செயல்பாட்டால் லூத் (அலை), வந்தவர்களை பாதுகாக்கும் பொருட்டு கவலையுற்றிருந்தார்கள். மனைவியை விட்டுவிட்டு தம் குடும்ப உறுப்பினர்களுடன் ஊரைவிட்டு வெளியேறி விடுமாறு லூத் (அலை) அவர்களிடம் வானவர்கள் கேட்டுக் கொண்டனர். ஊரிலுள்ளவர்கள் மீது கல்மாரி மழையை பொழியச் செய்து அல்லாஹ் அவர்களை அழித்தான். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 4)

16. மத்யன்வாசிகள், அவர்களது சகோதரர் ஷுஐப் (அலை) அவர்களுக்கு மாறு செய்தனர். நிலநடுக்கம் அவர்களைப் பிடித்துக் கொண்டது. ஆகவே, அவர்கள் தம் வீடுகளில் அதிகாலையில் இறந்து, முகங்குப்புற விழுந்து கிடந்தார்கள். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 4)

17. அது போன்றே, ஆத் மற்றும் ஸமூத் கூட்டத்தினரை அல்லாஹ் அழித்தான். ஏனெனில் ஷைத்தான் அவர்களுடைய தீயசெயல்களை அவர்களுக்கு அழகாகக் காண்பித்து, அவர்கள் அறிவு படைத்தவர்களாக இருந்தும், அவர்களை நேர்வழியில்

போக விடாது தடுத்து விட்டான். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 4)

18. ஃபிர்அவ்ன், காரூண், ஹாமான் ஆகியோரையும் அல்லாஹ் பிடித்தான். அவர்களிடம் மூஸா (அலை) தெளிவான அத்தாட்சிகளுடன் வந்தார். எனினும், அவற்றை நிராகரித்து அவர்கள் பூமியில் பெருமையடித்து நின்றார்கள். ஆனால் அவர்கள் அழிவிலிருந்து தப்பிக்க முடியவில்லை. (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 4)

19. அல்லாஹ் அல்லாதவர்களைப் பாதுகாவலர்களாக ஆக்கிக்கொண்டவர்களுக்கு உதாரணம் சிலந்திப் பூச்சி. அது தனக்கான வீட்டைக் கட்டுகிறது. நிச்சயமாக வீடுகளிலேயே மிகவும் பலகீனமான வீடு என்றால், அது சிலந்தியின் வலை வீடு தான். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 4)

-----------------------------------------------------------------